நீதித்துறை நடுவர் நீதி மன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

<u>பிரிவு 313(1)(ஆ) CrPC -இன் படியான விசாரணை</u>

<u>எதிரிகள்</u>:
1.மாரிமுத்து
2.மகேந்திரன்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 - பாலகிருஷ்ணன் அவருடைய புகாரில், 02.06.2023 ம் தேதி மாலை 06.00 மணியளவில் அ.சா.1 ன் வீட்டு அருகே வைத்து எதிரிகளாகிய நீங்கள் அ.சா.1 ன் ஆட்டோவை வழிமறித்து ஆட்டோ கண்ணாடியை அடித்து, அ.சா.1- பாலகிருஷ்னை தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கியதாகவும் , சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் மனு அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய்<br>2 வது எதிரி: பொய் |
| 2 | கேள்வி | : | அ.சா.2- திரு.பால்ராஜ் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், 17.06.2023 ம் தேதி 19.00 மணிக்கு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.இராமமூர்த்தி நிலைய அலுவலில் இருந்தபோது வெம்பக்கோட்டை காவல்நிலைய எழுத்தர் தன்னிடம் ஆஜர்படுத்திய சமுதாய பதிவேடுகளை பார்வையிட்டு 02.06.2023 ம் தேதி வெம்பக்கோட்டை காவல் நிலைய எழுத்தர் பதிவு செய்த மனு ரசீது எண்.170/2023 ஐ பார்வையிட்டு மனுவின் தன்மைகேற்ப வெம்பக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.159/2023, பிரிவுகள் 427, 323, 294(b) இ.த.ச -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய்<br>2 வது எதிரி: பொய் |
| 3 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி 17.06.2023 ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பொன்னுச்சாமி மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், மேலும் சம்பவ இடத்தில் கிடந்த கண்ணாடியின் உடைந்த துண்டுகளை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய்<br>2 வது எதிரி: பொய் |
| 4 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி சாட்சிகள் பாலகிருஷ்ணன், சரவணன், சக்கம்மாள், முருகன், சரவணன், பொன்னுச்சாமி, சித்திரை செல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய்<br>2 வது எதிரி: பொய் |

| | | | |
|---|---|---|---|
| 5 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.வேலுச்சாமி சாட்சிகள் பாலகிருஷ்ணன், சரவணன், சக்கம்மாள், முருகன், சரவணன், பொன்னுச்சாமி, சித்திரை செல்வம் ஆகியோர்களை விசாரணை செய்துள்ளார் அவர்கள் மேற்படி சார்பு ஆய்வாளரிடம் கூறியதுபோலவே அவரிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மனு ரசீது போட்ட தலைமை காவலர் கவிதாவை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய்<br>2 வது எதிரி: பொய் |
| 6 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.வேலுச்சாமி அவரது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது 294(b), 323, 427 இ.த.ச ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு<br>2 வது எதிரி: பொய் வழக்கு |
| 7 | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு<br>2 வது எதிரி: பொய் வழக்கு |
| 8 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | 1 வது எதிரி: இல்லை<br>2 வது எதிரி: இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரிகளிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

(ஒம்/–திரு.சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

// உண்மை நகல் //P.P